**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.168/2022** **நாள்.21.04.2025**

2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | தொழில் | |
| த.பெ/க.பெ. | பழனி | சாதி | |
| கிராமம் | கொடுக்கன்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 51 |

**வா.சா.1**

**குறுக்கு விசாரணை**

வழக்கு நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். என் சொந்த ஊர் கொடுக்கன்குப்பம் கிராமம். பிரதிவாதியும் அதே ஊரை சேர்ந்தவர். பிரதிவாதி விவசாய தொழில் செய்துவருகிறாரா என்றால் செங்கல் வியாபாரம் செய்துவருகிறார். நான் மேல்மலையனூர் கோவில் அருகே மளிகை கடை வைத்து நடத்திவருகிறேன். கடையில் வரும் வருமானத்தை வட்டிக்கு விடுவது உங்கள் வழக்கம் என்றால் சரியல்ல. உங்களிடம் ரூ.10,000க்கு மேல் கடன் கேட்டால் பாண்டு எழுதி வாங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் மற்றும் பிராதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். உங்கள் பிராதில் கிரைய தொகை ரூ.1,65,000 என பேசி ரூ.1,60000 கொடுத்துள்ளீர்கள் மீதி ரூ.5000 கொடுக்க வேண்டி உள்ளது என குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் இந்த அக்ரிமெண்ட் 03.02.2020ல் 2வதாக போடப்பட்ட அக்ரிமெண்ட் ஆகும். முதலாவது அக்ரிமெண்ட் 22.01.2020ல் போடப்பட்டது ஆகும். மேற்படி 2 அக்ரிமெண்டும் பதிவு செய்யப்பட்டது ஆகும். கடனிற்காக அக்ரிமெண்ட் போட்டால் அதை பதிவு செய்வது உங்கள் வழக்கம் என்றால் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)